**O.S.No. 174/2012**

**DW3 : மாலதிதேவி** தேதி 06.02.2026

பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் ஈரோடு சம்பந் நகரில் குடியிருக்கிறேன். தாவா சொத்தில் நான் குடியிருந்ததில்லை. தாவா சொத்தை 12.12.1997 ல் என் தந்தை எனக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். தாவா சொத்து ஆதியில் என் அப்பா வழி தாத்தா நாச்சிமுத்து கவுணடருக்கு பாத்தியப்பட்டது. நாச்சிமுத்து கவுண்டர் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. தாவாசொத்து நாச்சிமுத்து கவுண்டர் தான் விலைக்கு வாங்கினார் வேறு யாரும் வாங்கவில்லை. நாச்சிமுத்து கவுண்டர் விவசாயம் செய்து வந்தார். அந்த விவசாயத்தின் மூலம் வந்த வருமானத்தை வைத்து தான் வேறு சொத்துகளை வாங்கினார் என்றால் சரிதான். பவளத்தம்பாளையத்தில் உள்ள தாவா சொத்தை நாச்சிமுத்து கவுண்டர் என் தந்தைக்கு 1992 ல் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார். தானசெட்டில்மென்ட் வைத்து தான் என் தந்தை எனக்கு சொத்தை தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்தார். அந்த தானசெட்டில்மென்ட் படி என் சகோதரர் செந்திலுக்கும் சொத்தை கொடுத்துள்ளார். எனக்கும் என் சகோதரருக்கும் தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் பொதுவில் பாத்தியம் என்று எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பாகம் ஏற்படாத நிலையில் பொதுவில் கண்டு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் செக்குபந்தி விவரம் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 21 என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் சொத்தை அளந்து எடுத்து கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 21 ன் படி அன்றைய தேதியில் எனக்கு சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என்றால் அன்று ஒப்படைக்கவில்லை.

12.12.1997 தேதிய தானசெட்டில்மென்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தாத்தா என் தந்தைக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் தேதி தெரியாது 1992 வருடம் என்று தெரியும். என் தாத்தா என் தந்தைக்கு பொதுவில் சரிபாதி என்று எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். சொத்தை பாகக்கறார் செய்யாமல் எனக்கும் என் தம்பி செந்தில்குமாருக்கும் எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் ச எண் 33/2. என் தம்பி செந்திலுக்கு எத்தனை ஏக்கர் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கும் என் தம்பிக்கும் பாதி பாதி என்று எழுதி கொடுத்துள்ளார். மொத்தம் 4.98 ஏக்கரில் 1 ஏக்கர் என் அப்பா பிவாசாஆ 21 ன் படி எனக்கு கொடுத்துள்ளார். இது தவிர என் தந்தைக்கு வேறு சொத்துகள் இருந்தது. அது சுள்ளிகாடு என்றால் சரிதான் காட்டின் பெயர் எனக்கு தெரியாது. பவளத்தம்பாளையத்தில் நாச்சிமுத்து கவுண்டரும் அவர் மனைவி ராமாயம்மாளும் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு தான் இறந்துவிட்டார்கள். நாச்சிமுத்து கவுண்டருக்கும் ராமாயம்மாளுக்கும் அவருடைய பெற்றோர்கள் சொத்தை எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் என் தம்பி செந்தில் என் அப்பா ஆகியோர் என் தாத்தா நாச்சிமுத்து கவுண்டர் சுயநினைவு இல்லாத நிலையில் அவரை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டோம் என்றால சரியல்ல. என் தாத்தா உயில் ஏதேனும் எழுதி வைத்திருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தா என் அப்பாவிற்கும் என் தம்பிக்கும் உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல உயில் எதுவும் எழுதவில்லை தானசெட்டில்மென்ட் தான் எழுதி வைத்துள்ளார். என் அத்தை பெயர் சுப்புலட்சுமி வாதி. நாச்சிமுத்துகவுண்டர் ராமாயம்மாளுக்கு என் தந்தை சண்முகம் மற்றும் என் அத்தை சுப்புலட்சுமி வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தில் அத்தை வாதி சுப்புலட்சுமிக்கும் பங்குள்ளது என்றும் நாங்கள் எங்கள் தாத்தாவை ஏமாற்றி எழுதி கொண்ட தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் வாதி சுப்புலட்சுமியை கட்டுப்படுத்தாது என்றும் அவை செல்லத்தகாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா

சொத்து என் அத்தை சுப்புலட்சுமி என் தந்தை என் தாத்தா ஆகியோர் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்றும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி கூட்டு பங்குதாரரோ கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் வாதிக்கு ஏற்படவில்லை என்றும் வாதி தரப்பினர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் என் தம்பி என் தந்தை ஆகியோர் சேர்ந்து வாதிக்கு சேர வேண்டிய பங்கை பொறுத்து ஏமாற்றும் எண்ணத்தில் தானசெட்டில்மென்ட் பத்திரங்களை ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**O.S.No. 260/2018**

**PW1 : சுதா** தேதி 06.02.2026

**வாசா1 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1, 2 பிரதிவாதிகள் என் சகோதர்கள். 3 ம் பிரதிவாதி சுகுணா 2 ம் பிரதிவாதியின் மனைவி. என் அப்பா லோகநாதன் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகத்தில் இல்லை. என் அப்பா இறக்கும்போது என் வயது சுமார் 12. 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய இளைய சகோதரர்கள். எனக்கு 2001 ல் திருமணமானது. என் அப்பா இறந்த பிறகு என் தாயார்தான் எங்கள் மூவரையும் படிக்க வைத்து வளர்த்தார். என் அம்மாவே எனக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார். என் திருமணத்திற்குப் பின்னிட்டு என் அம்மா எனக்கு சொத்து ஏதேனும் கொடுத்திருக்கிறாரா? என்றால் இல்லை. 25.07.2014 ல் ஒரு சொத்தை என் தாயார் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். என் அம்மாவும் 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து 25.07.2014 ல் ஒரு சொத்தை எழுதிக் கொடுததார்கள். மேற்படி சொத்தை என்ன ஆவணமாக எழுதிக் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் 7 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 25.07.2014 தேதிய பத்திரத்தை அன்றே நான் பெற்றுக் கொண்டேனா? என்றால் இல்லை. அந்த ப்த்திர்ஙிகளின் அடிபப்ைடிடயில் வருவாய்த்துறை ஆவண்ஙகளை என் பெயரில் மாற்றிக் கொண்டேனா? என்றால் இல்லை. அ து எந்த் சொத்துக்களைப் பொருத்து எழுதப்பட்டது என்பதையும்நான் தெரிந்துகொள்ளவில்லை. அந்த பத்திரத்தில் உள்ள சொத்து தாவாவில் அஎந்த அயிட்டமாகக் காட்டப்பட்டுளளது என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தைக் கிரயம் வாங்கியதால் அவரை தரப்பினராகச் சேர்த்திருக்கிறேன். சாந்தலிங்கம் இந்த வழக்கை தாகக்ல் செய்வதற்கு முன்பு ஒரு மாதத்திற்கு முன்பாக கிரயம் பெற்றார். அதன் பிறகுதான் நான் வழக்கை தாக்கல் செய்தேன். சாந்தலிங்கம் கிரயம் வாங்கிய பிறகு சொத்தில் கட்டிடம் கட்டிவிட்டார். என் தம்பிகள் எந்த தேதியில் மோசடியாக ஆவணம் எழுதிக் கொண்டார்கள் என்றால் ஆகஸ்ட் 2018 ல் எழுதிக் கொண்டார்கள். என் கணவருக்கு எழுதப் படிக்கத் தெரியும். என் கணவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்திடுவார். நானும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவேன். என் தம்பிகள் மீது நான் காவல்நிலையத்தில் 2018 ல் மோசடியாக ஆவண்ஙகளை ஏற்படுத்திக் கொண்டதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்திக் கெண்டதகவும ந்த ஆவணங்களின் அடிடபப்டையில் யாரும் கிரயம் பெறக்கூடாது

என்றும் பொது அறிவிப்பு கொடுத்தேனா? என்றால் இல்லை. மேற்படி மோசடி ஆவண்களை ரத்து சய்யக் கோரி பதிவாளரிடம் மனு கொடுக்கவில்லை. பதிவு செய்யக்கூடாது என்று தடங்கல் மனு எதுவும் பதிவாளரிடம் தாக்கல் செய்யவில்லை. 4 ம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் தம்பி மனைவியிடமிருந்து கிரயம் வாங்கினார். என் தம்பி மனைவி சுகுணாவிற்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் என் தம்பி அவர் மனைவி பெயரில் சொத்துகள் எழுதி வைத்திருந்தார். அவ்வாறு என் தம்பி அவரது மனைவி பெயரில் எழுதி வைத்த பத்திரத்மைத ரத்து செய்ய வேண்டுமென்ற வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. இவ்வழக்கில் என் தம்பி அவரது மனைவிக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை. சாந்தலிங்கத்தின் கிரயப் பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. அந்தக் கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் சாந்தலிங்கம் வங்கி பரிவர்த்னை மூலமாக 15.10.2018 தேதியில் ரூ.26,93,000/-க்கு சொதத்துக்களை் கிரயம் வாங்கியுளளார் என்றும் அந்த தேதியிலிருநது சொத்தை அவர்தான் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். ஆரதம்பத்தில் கட்டிடம் கட்டவில்லை.ங பின்னிட் கட்டிட்இ கட்டிடவிட்டார். கட்டிடம் கட்டும்போது ஆட்சேபணை அறிவிப்போ மனுவோ செய்வில்லை. இவ்வழக்கு நிலுவையில் இருக்கஙம்போதுதாதன் கட்டிடம் கட்டினார். தடை உத்தரவு கோரி மனு எதுவும் இவ்வழக்கில் தாகக்ல் செய்யவில்லை. தற்போது மூன்று மாடி கட்டிடம் உள்ளது. அந்த 3 மாடியில் வாடகைதாரர்கள் உள்ளார்கள், வாடகையை 4 ம் பிரதிவாதிதான் வாங்கி வருகிறார். 4 ம் பிரதிவாதி நல்லெண்ண கிரயதாரர் என்றும் எனக்கும் என் தம்பிாகளுக்கும் இடையேயான பரிவர்த்தனை குறித்து தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் 4 ம் பிரததிதிவாதி பெயரில் பரிகாரம் கோர இயலாது என்றாறல் சரியல்ல. நானே என் விருப்பத்தின் பேரில் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.